




. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL

RNI No : TNTAM/2023/85936








www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

.நாகர்கோவில் பதிப்பு . 07.03.2026 . மலர் 04 . இதழ் 65. சனிக்கிழமை | dhinatamil | . NAGERCOIL EDITION . 07.03.2026 . VOL 04 . ISSUE 65. SATURDAY . 4 PAGES . Rs.5


## தீவிரமடைந்து வரும் ஈரான்-அமெரிக்கா போரால் இந்தியாவில்

# பெட்ரோல், டீசல், கேஸ் தட்டுப்பாடு வராது

## மத்திய அரசு திட்டவட்டம் !!

புதுடெல்லி, மார்ச்.07-

பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு விநியோகத்தில் எந்த பாதிப்பும் ஏற்படாது என்றும், எரிபொருள் போதுமான அளவு கிடைப்பதை உறுதிப்படுத்த உற்பத்தியை அதிகரிக்குமாறு அனைத்து சுத்திகரிப்பு நிலையங்களுக்கும் உத்தரவிடப்பட்டு உள்ளதாகவும் மத்திய அரசு வட்டாரங்கள் உறுதிபட தெரிவித்துள்ளன.

ஈரானுக்கு எதிராக இஸ்ரேலும் அமெரிக்காவும் இணைந்து கடந்த பிப்.28-ம் தேதி தாக்குதலைத் தொடங்கின. ஈரானும் பதிலடி கொடுத்து வருகிறது. இந்தப் போர் தீவிரமடைந்து வருவதாலும், வளைகுடா நாடுகளில் இருந்து கச்சா எண்ணெய் வரத்துப் பாதையான ஹார்முஸ் ஜலசந்தி முடக்கப்பட்டிருப்பதாக செய்திகள் வருவதாலும் உள்நாட்டில் எரிபொருள் தட்டுப்பாட்டுக்கான சாத்தியங்கள் குறித்து செய்திகள் வெளியாகின.

மேலும், மங்களூரு சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட உள்ளதாகவும் செய்திகள் வெளியாகின.

இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக அரசு வட்டாரங்கள் கூறியதாவது-

ஹார்முஸ் ஜலசந்தி பாதையில் ஏற்படும் இடையூறுகள் குறித்த கவலை உள்ள போதிலும், கச்சா எண்ணெய், பெட்ரோலியப் பொருட்கள், எல்பிஜி விநியோகம் ஆகியவற்றில் இந்தியா மிகவும் 'வலுவான' நிலையில் உள்ளது.



ஹார்முஸ் ஜலசந்தி பாதை மூலம் மேற்கொள்ளப்படும் இறக்குமதியைவிட பன்முகப்படுத்தப்பட்ட ஆதாரங்கள் மூலம் அதிக கச்சா எண்ணெயை இந்தியா இறக்குமதி செய்கிறது. இந்தியாவின் தற்போதைய கச்சா எண்ணெய் மற்றும் பெட்ரோலியப் பொருட்களின் இருப்பு உள்நாட்டுத் தேவையை பூர்த்தி செய்ய போதுமானது.

அரசாங்கம் நிலைமையை உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது. ஹார்முஸ் ஜலசந்தி பாதையில் தடை ஏற்படுமானால் அதை ஈடு செய்ய மாற்று வழிகள் மூலம் விநியோகத்தை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக இந்தியா தனது கச்சா எண்ணெய் இறக்குமதியை கணிசமாக பன்முகப்படுத்தியுள்ளது. 2022-ல் இந்தியாவின் கச்சா எண்ணெய் தேவையில் 0.2% மட்டுமே ரஷ்யாவிடம் இருந்து இறக்குமதி செய்யப்பட்டது. அதேநேரத்தில், அடுத்தடுத்த ஆண்டுகளில் இது 20% அளவுக்கு உயர்ந்தது. அதாவது ஒரு நாளைக்கு சுமார் 1.04 மில்லியன் பீப்பாய்கள்.

மங்களூரு சுத்தகரிப்பு மற்றும் பெட்ரோ கெமிக்கல்ஸ் லிமிடெட் (விஸிறிலி) சுத்திகரிப்பு நிலையம் மூடப்படும் என்ற தகவல் தவறானது. விஸிறிலி சுத்திகரிப்பு நிலையம் முழுமையாக செயல்பட்டு வருகிறது.

போதுமான அளவு கச்சா எண்ணெய் கையிருப்பில் உள்ளது. எல்பிஜி போதுமான அளவு கிடைப்பதை உறுதிப்படுத்த உற்பத்தியை அதிகரிக்குமாறு அனைத்து எல்பிஜி சுத்திகரிப்பு நிலையங்களுக்கும் அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

எல்பிஜி இருப்பைப் பொறுத்தவரை, இந்தியா தற்போது ஒரு வலுவான நிலையில் உள்ளது. கடந்த ஜனவரியில் இருந்து அமெரிக்காவிடம் இருந்தும் எல்பிஜி வரத் தொடங்கியுள்ளது என்று மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.



சட்டமன்றத் தேர்தலில் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள பல்லடம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடுவதற்கான தனது விருப்ப மனுவினை தாக்கல் செய்தார் திருப்பூர் கிழக்கு மாவட்ட திமுக பொறுப்பாளரும் மாநகராட்சி 4 வது மண்டல தலைவருமான இல பத்மநாதன் கழக அமைப்பு செயலாளர் ஆர் எஸ் பாரதியிடம் வழங்கினார் உடன் திமுக துணை பொதுச் செயலாளர் தமிழ் வளர்ச்சி துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன். மனித வள வேளாண்மை துறை அமைச்சர் திருமதி கயல்விழி செல்வராஜ் மற்றும் திமுக கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை தாலூகா அலுவலகத்தில் மகளிர் தின விழா வட்டாட்சியர் ராம சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சமூக பொறுப்பு தாசில்தார் ஜலாலுதீன், துணை தாசில்தார் தியாகராஜன், ராமர், வட்ட வழங்கல் அலுவலர் சாமூண்டீஸ்வரி, வருவாய் ஆய்வாளர்கள் வித்யாஸ்ரீ , நாகஜோதி (திருப்புல்லாணி) சத்யராதா (உத்ரகோசமங்கை) அலுவலர்கள் சரவணன், ஜெயக்குமார் உட்பட பலரும் கலந்து கொண்டனர். மேலும் புதிதாக பொறுப்பேற்ற வட்டாட்சியருக்கு அஇஅதிமுக மாவட்ட மாணவரணி இணைச் செயலாளர் கே ஆர் சுரேஷ் வாழ்த்துக்களையும் தெரிவித்தார்,

## தூத்துக்குடி நீதிமன்றங்களில் பலத்த போலீஸ் பாதுகாப்பு



தூத்துக்குடி, மார்ச்.07-

தூத்துக்குடி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் காவல்துறையினரின் பாதுகாப்பு பணிகளை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் சி. மதன் அவர்கள் நேரில் சென்று ஆய்வு செய்தார்.

தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் சி. மதன் அவர்களின் உத்தரவின் படி தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள அனைத்து நீதிமன்ற வளாகங்களிலும் காவல்துறையினர் ரோந்து பணி மேற்கொண்டு மற்றும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதன்படி தூத்துக்குடி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வரும் காவல்துறையினரின் பணிகளை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் சி. மதன் இன்று நேரில் சென்று ஆய்வு செய்து, சந்தேகத்திற்கிடமாக வரும் நபர்களை சோதனை செய்தும், குற்ற சம்பவங்கள் நிகழாமல் தடுக்கும் பொருட்டு தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட வேண்டும் எனவும் காவல்துறையினருக்கு அறிவுரைகள் வழங்கினார்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மதுரை மாவட்ட விளையாட்டு வளாகத்தில் மொத்தம் 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கபடி ஆடுகளம், 6 எண்ணிக்கை கொண்ட டேபிள் டென்னிஸ் ஆடுகளங்கள் கொண்ட மதுரை ஒலிம்பிக் அகாடமி, செயற்கை தரையமைப்பு கொண்டதாக மேம்படுத்தப்பட்ட 3 டென்னிஸ் மைதானங்கள் மற்றும் 2 கூடைப்பந்து மைதானங்களை திறந்து வைத்து பார்வையிட்டு, விளையாட்டு வீரர்களுடன் கலந்துரையாடினார்.

## மதுரையில் நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட

# பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாமில் பணியாற்றிய மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பாராட்டு விழா

## அமைச்சர் மூர்த்தி சான்றிதழ் வழங்கினார்



மதுரை, மார்ச். 07-

மதுரை தமுக்கம் மைதானம் மாநாட்டு மையத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாமில் பணியாற்றிய மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களுக்கு பாராட்டு விழா அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

இந்த அமைச்சர் மூர்த்தி தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல் இன்று வரை பல்வேறு சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அனைத்து துறைகளிலும் பொதுமக்களுக்கு செய்த சேவைகள் பற்றி பட்டியலிடப்பட்டுள்ளது.

அந்த வகையில் மதுரை மாவட்டத்தில் மிகவும் சிறப்பாக இதுவரை 43 நலம் காக்கும் ஸ்டாலின் முகாம்கள் நடைபெற்றுள்ளது. மதுரை மாவட்டத்தில் 43 முகாம்களில் 57,000 பொதுமக்கள் பயன் பெற்றுள்ளனர். இந்த முகாம்கள் கிராமத்தில் உள்ள பொதுமக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது. இம்முகாமில் அனைத்துத்துறை மருத்துவப் பணியாளர்களும் தங்களுக்கென்று ஒதுக்கப்பட்ட பணிகளை மிகச் சிறப்பாக செய்தார்கள். கொரோனா காலத்தில், பொதுமக்கள் எதிர்கொண்ட முக்கிய சவால்களில் ஒன்றாக ஆக்சிஜன் பற்றாக்குறை இருந்தது. அந்த கடினமான சூழ்நிலையில், மதுரை அரசு இராசாசி மருத்துவமனையில் இருந்து பொதுமக்களுக்கு தேவையான மருத்துவ சேவைகளை இடையறாது வழங்கி, ஆக்சிஜன் தேவையை சிறப்பாக நிர்வகித்து பல உயிர்களை காப்பாற்றி முக்கிய பங்கு வகித்தது. மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் சுகாதார பணியாளர்கள் இணைந்து முழு அர்ப்பணிப்புடன் பணியாற்றினர். இதனை பாராட்டும் வகையில் இந்த விழா நடைபெற்றது என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார், அரசு இராசாசி மருத்துவமனை முதல்வர் அருள் சுந்தரேஷ்குமார், இணை இயக்குநர் செல்வராஜ், மாவட்ட சுகாதார அலுவலர் (நலப்பணிகள்) பொற்செல்வன், மற்றும் மருத்துவர்கள், பணியாளர்கள் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# விஐடி உதவி துணை தலைவர் பிறந்தநாளை முன்னிட்டு முதியோர் இல்லம், அரசு பள்ளிகளுக்கு நலத்திட்ட உதவி



வேலூர், மார்ச்.07-

வேலூர் விஐடி உதவி துணை தலைவர் காதம்பரி எஸ்.விசுவநாதனின் பிறந்தநாளை முன்னிட்டு, பார்வைத்திறன் குறைபாடு உடையவர்கள், முதியோர் இல்லங்களில் பராமரிக்கப்படுபவர்களுக்கு கட்டில், மெத்தை உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

விஐடி உதவி துணை தலைவரான காதம்பரி எஸ்.விசுவநாதனின் பிறந்தநாள் விழா இன்று கொண்டாடப்பட்டது. விஐடி வேந்தர் கோ.விசுவநாதன், துணை தலைவர் சங்கர் விசுவநாதன், ரமணி பாலசுந்தரம் மற்றும் ஆசிரியர்கள், ஊழியர்கள், பணியாளர்கள் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தனர்.

அவரது பிறந்தநாளை முன்னிட்டு, பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. இதில் மக்கள் களப்பணி இயக்கம் டாக்டர் ரவிசங்கர் குழுவினரிடம் பார்வைத்திறன் குறைபாடு உடையவர்களுக்கு 50 ஊன்றுகோல்களும், முதியோர் இல்லத்தில் தங்கியுள்ள 15 முதியவர்களுக்கு மெத்தைகளுடன் கூடிய படுக்கைகள் வழங்கப்பட்டன.

அரசு பள்ளிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் வகையில் சரஸ்வதியிடம் வேலூர் மாவட்டத்தில் உள்ள 10 அரசு பள்ளிகளுக்குத் தேவையான கழிப்பறை பக்கெட்டுகள், குவளைகள் மற்றும் குப்பைத் தொட்டிகள் வழங்கப்பட்டன.

மேலும், வேலூர் அரசு மருத்துவமனையில் நோயாளிகளின் பயன்பாட்டிற்கென கட்டில்கள், படுக்கைகள், தலையணைகள் அரசு மருத்துவமனையின் இருப்பிட மருத்துவர் ரவிச்சந்திரனிடம் வழங்கப்பட்டன.

இதைத்தொடர்ந்து சிஎம்சி மருத்துவமனையில் நரம்பியல் பிரிவில் பிசியொதெரபி சிகிச்சைக்காக சுமார் 3 ஆண்டுகளுக்கு சிறுமி வர்ஷாவுக்கு ரூ.25000 மருத்துவ உதவியாக வழங்கப்பட்டது.

உதவும் உள்ளங்கள் அமைப்பின் சந்திரசேகரிடம் படுக்கையில் உள்ள 10 நோயாளிகளுக்குத் தேவையான டயப்பர்கள் வழங்கப்பட்டன. முதியோர் இல்லத்திற்கு 10 நடைபயிற்சி உபகரணங்களும், நீர் புகாத படுக்கை விரிப்புகள் வழங்கப்பட்டன.

இதுதவிர 10 வயது சிறுவனின் கண் சிகிச்சைக்கு தேவையான சொட்டு மருந்து, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்ட நோயாளிக்கு தேவையான மருந்துகள், பார்வைத்திறன் குறைபாடு உடையவரின் மகளுக்கு தேவையான மருத்துவ உதவிகளும் வழங்கப்பட்டன.

ரைஸ் மறுவாழ்வு மையம், கே.வி. சிறப்பு பள்ளி, சிசு பவன், நிர்மல் இல்லம், அன்பு இல்லம், பெத்தேல் இல்லம், பிரியதர்ஷினி சிறப்பு பள்ளி, ஆத்திச்சூடி சிறப்புப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்குச் சிறப்பு கல்விப் பொருட்கள் மற்றும் மதிய உணவு வழங்கப்பட்டது. மேலும், இளம் இந்திய அமைப்பு சார்பில் ஹெல்மெட் மற்றும் மருந்துகள் வழங்கப்பட்டன.

# குமரிக்கு வந்த தமிழக துணை முதல்வர் ரூ.91.20 கோடி நல உதவிகள் வழங்கினார்



நாகர்கோவில், மார்ச்.07 -

தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று குமரி மாவட்டம் வந்தார். அவர் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வருவாய் கூட்டரங்கில் நடந்த நல உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

நிகழ்ச்சிக்கு அமைச்சர் மனோ தங்கராஜ், தலைமை வகித்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா, காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி பேசுகையில்-

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் அரசு விழாவில் பங்கேற்று உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். இன்றைய விழாவில் மகளிர் திட்டத்தின் சார்பில் 3000 மகளிருக்கு ரூபாய் 10.61 கோடி மதிப்பில் சுய உதவி குழுக்களுக்கான வங்கி கடன், கூட்டுறவுத் துறை சார்பில் 175 பயனாளிகளுக்கு ரூ.1.91 கோடி மதிப்பில் டாப்செட்கோ கடனும், 35 பயனாளிகளுக்கு ரூ.7.38 கோடி மதிப்பில் கால்நடை பராமரிப்பு கடனும், 1025 பயனாளிகளுக்கு ரூ.7.38 கோடி மதிப்பில் பயிர்கடனும், 500 பயனாளிகளுக்கு ரூ.8.09 பயனாளிகளுக்கு சுயஉதவிக்குழு கடனும், 12 பயனாளிகளுக்கு மாற்றுத்திறனாளிக் கடனும், 15 பயனாளிகளுக்கு ரூ.7.50 இலட்சம் மதிப்பில் ஆதரவற்ற விதவை மகளிர் கடனும், 7 மகளிர்க்கு மகளிர் தொழில் முனைவோர் கடனும், 21 பயனாளிகளுக்கு ரூ.17.20 இலட்சம் மதிப்பில் சிறுகுறு நடுத்தர நிறுவனங்களுக்கான கடனும், 3 பயனாளிகளுக்கு ரூ.16 இலட்சம் மதிப்பில் பணிபுரியும் மகளிர் கடன் உட்பட 91.20 கோடியில் நல உதவிகள் அனைத்து துறைகளிலும் வழங்கப்பட்டன என பேசினார்.

மேலும் வனத்துறை சார்பில் ரூ.24 இலட்சம் மதிப்பில் பழங்குடியின இளைஞர்களுக்கு திறன் பயிற்சி மற்றும் போட்டி தேர்வுகளுக்கு பயிற்சி பெறுவதற்கு காணி தொல்குடி பயிற்சி மையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கூறினார்.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில உணவு ஆணையத்தலைவர் சுரேஷ்ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் ராஜேஷ்குமார் (கிள்ளியூர்), பிரின்ஸ் (குளச்சல்), தாரகை கத்பர்ட் (விளவங்கோடு), நாகர்கோவில் மாநகராட்சி மேயர் மகேஷ் துறை அலுவலர்கள், பயனாளிகள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.



# உதகை நொண்டி மேடு பகுதியில் அதிமுக சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

ஊட்டி, மார்ச். 07-

நீலகிரி மாவட்டம் உதகை நொண்டி மேடு பகுதியில் அதிமுக சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. இந்த நிகழ்வில் அமைப்புசாரா ஓட்டுநர் அணி நகரச் செயலாளர் மற்றும் 32 வது வார்டு கிளைச் செயலாளர் டி கார்த்திக் ஏற்பாட்டில் நொண்டி மேட்டுப்பகுதியில் மாவட்டச் செயலாளர் டி. கப்பச்சி வினோத் தலைமையில் நகரச் செயலாளர் கா.சண்முகம் முன்னிலையில் 300 க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர் இந்த நிகழ்வில் அம்மா பேரவை நகரச் செயலாளர் திவாகர் எம்ஜிஆர் மன்றம் நகரச் செயலாளர் ஜெயராமன் தாம்பட்டி சிவக்குமார் வர்த்தக அணி நகரச் செயலாளர் பூக்கடை ஸ்ரீதர் நொண்டி மேடு கிளை நிர்வாகிகள் சந்தோஷ் சுரேஷ் திருமூர்த்தி சேகர் அந்தோனிததுஸ் கோகுல் மகளிர் அணி தீபா ரம்யா உட்பட கழக நிர்வாகிகள் உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.



மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகையில் சிட்டி யூனியன் வங்கியின் சமூக பொறுப்பு நிதியின் கீழ் மாநகராட்சி அலுவலக பயன்பாட்டிற்காக புதிய கணிப்பொறிகளை ஆணையாளர் சித்ரா விஜயன் வழங்கினார்கள். அருகில் தலைமை பொறியாளர் பாபு, சிட்டி யூனியன் வங்கி மதுரை மண்டல மேலாளர் துரைராஜ், உதவி பொது மேலாளர் சத்யநாராயணன், கிளை மேலாளர்கள் கீதா, வேணுகோபால், உதயகுமார் உட்பட மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

உங்கள் அபிமான
தினதமிழ்
செய்திகளை
Whatsapp - ல்
பின் தொடர


# பாரம்பரிய வடமாடு மஞ்சுவிரட்டு காளைகள் மையப்படுத்தி நடிகர் விமல் நடித்த வடம் திரைப்படம் தமிழக முழுவதும் ரிலீஸ்-சினிமா ரசிகர்கள் மத்தியில் வரவேற்பு



கோவை, மார்ச்.07-

வெற்றி விநாயகா பிக்சர்ஸ் பிரபு மற்றும் மாசாணியம்மன் பிக்சர்ஸ் நிறுவனத்தின் தயாரிப்பாளர் ராஜசேகர்,இனை தயாரிப்பாளர் சங்கர் தயாரிப்பில், கேந்திரன் இயக்கத்தில், இமான் இசையில் கதாநாயகனாக விமல், கதாநாயகியாக சன்சிகா ஸ்ரீ மற்றும் நட்டி என்ற நட்ராஜ் ஆகிய நடிகர்கள் நடித்த தென் மாவட்டங்களின் பாரம்பரிய வடமாடு மஞ்சுவிரட்டு காளையை மையப்படுத்தி பொள்ளாச்சி, கோவை,உடுமலை போன்ற பகுதியில் எடுக்கப்பட்ட வடம் திரைப்படம் இன்று தமிழக முழுவதும் 400க்கும் மேற்பட்ட திரையரங்கில் திரையிடப்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக கோவை கங்கா, யமுனா திரையரங்கில் திரையிடப்பட்ட வடம் திரைப்படத்தை சினிமா ரசிகர்கள் திரைப்படத்தை பார்த்தனர். தென் மாவட்டங்களில் பிரபலமாக உள்ள பாரம்பரிய வடமாடு மஞ்சுவிரட்டு போட்டிகள் கொங்கு மண்டல பகுதியில் உள்ள மக்களுக்கும் தெரிய வேண்டும் என்ற நோக்கில் இந்தத் திரைப்படம் அமைந்துள்ளதாகவும், திரைபடம் ஆரம்ப முதல் கடைசி வரை இமான் இசையில் காதல், சண்டை, சென்டிமென்ட்,பாடல் காட்சிகள் மற்றும் காளைகள் வரும் காட்சிகள் அனைத்தும் கிராமிய பகுதிகள் நிறைந்து காணப்படுவதால் ரசிகர்களிடையே வடம் திரைப்படம் நல்ல வரவேற்பு இருப்பதாக செய்தியாளர்களிடம் தெரிவித்தனர்.

# தஞ்சாவூர் பெரிய கோவிலில் சித்திரை பெருவிழா பந்தல்கால் முகூர்த்தம் - ஏப்ரல் 27ந்தேதி தேரோட்டம்



தஞ்சாவூர்.மார்ச்.7-

தஞ்சாவூர் பெரிய கோவில் உலக புகழ் பெற்றது. தமிழகம் மட்டு மின்றி வெளி மாநிலம், வெளி நாடுகளில் இருந்தும் தினமும் ஏராளமான பக்தர்கள், சுற்றுலா பயணிகள் பெரிய கோயிலுக்கு வந்து செல்கின்றனர்.

பல்வேறு சிறப்புகள் வாய்ந்த தஞ்சாவூர் பெரிய கோவிலில், ஆண்டுதோறும் சதயவிழா, ஆஷாட நவராத்திரி விழா, சித்திரை பெருவிழா என பல்வேறு விழாக்கள் கொண்டாடப்பட்டு வருகின்றன. இதில் சித்திரை பெருவிழா 18 நாட்கள் நடைபெறும். இந்த ஆண்டு க்கான சித்திரை பெருவிழாவுக் கான பந்தக்கால் முகூர்த்தம் நடைபெற்றது.

இதனை முன்னிட்டு பெரியநாயகி அம்மன் சன்னதி வளாகத்தில் சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. பின்னர் பந்தக்காலு க்கு பால், தயிர், மஞ்சள் மற்றும் வாசனை திரவியங்களைகொண்டு அபிஷேகம் செய்யப்பட்டு தீபாராதனை காண்பிக்கப்பட்டது. தொடர்ந்து, பந்தக்கால் நடப்பட்டு சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் கவிதா, கண்காணிப்பாளர் ரவி, செயல் அலுவலர் சத்யராஜ் மற்றும் பொதுமக்கள், பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

சித்திரை பெருவிழாவிற்கான, கொடியேற்றம் அடுத்த மாதம் (ஏப்ரல்) 13-ம் தேதி நடைபெறுகிறது. விழாவின் முக்கிய நிகழ்ச்சியான சித்திரை தேரோட்டம் ஏப்ரல் 27-ந்தேதி நடக்கிறது. 30-ந் தேதி சித்திரை பெருவிழா நிறைவு பெறுகிறது.

# தஞ்சாவூர் தமிழ் பல்கலைக் கழகத்தில் வ.அய் சுப்ரமணியம் நினைவு அறக்கட்டளை சொற்பொழிவு



தஞ்சாவூர் மார்ச். 7-

தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழக த்தில் மொழியியல் துறை சார்பில் முதுமுனைவர் வ.அய்.சுப்ரமணியம் நினைவு அறக்கட்டளை சொற் பொழிவு நடைபெற்றது

இந்நிகழ்ச்சியில் தமிழ் பல்கலை க்கழக பதிவாளர் (பொ)பன்னீர் செல்வம் வாழ்த்துரையாற்றினார் பேராசிரியர் வ.அய்.சுப்ரமணியம் தமிழ் பல்கலைக் கழகம் மற்றும் திராவிட பல்கலைக்கழக வடிவமைப்பாளர் என்ற தலைப்பில் மொழியியல் துறை முன்னாள் தலைவர் கி .அரங்கன் பேசினார்.

தொடர்ந்து பிற்பகலில் நீதிபதி மகாராஜன் நினைவு அறக்கட்டளை சொற்பொழிவும்,கிருஷ்ணசாமி ராஜம்மாள் நினைவு அறக்கட்டளை சொற்பொழிவும் நடைபெற்றன

இதில் தமிழ்ச்சொற் பொருள் மாற்றமும் வளர்ச்சியும், ஒரு வரலாற்று பார்வை என்ற தலைப்பில் அயல்நாட்டு தமிழ் கல்வி துறை முன்னாள் தலைவர் கார்த்திகேயன் பேசினார் இந்நிகழ்ச்சியில் பேராசிரியர்கள் சங்கர் ,காமராஜ,பவானி, வெற்றிச்செல்வன் ,முன்னாள் உதவி பதிவாளர் கோசலை உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

முன்னதாக மொழியியல் துறை தலைவர் மங்கையர்க்கரசி அனை வரையும் வரவேற்றார் .நிறைவாக உதவி பேராசிரியர் ரமேஷ் குமார் நன்றி கூறினார்

# விளாத்திகுளம் தொகுதியில் திமுக சார்பில் போட்டியிட சீட் கேட்கும் எஸ். எஸ்.ரவி.



விளாத்திகுளம் மார்ச்.07-

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புதூர் - வெம்பூர் கிராமத்தைச் சேர்ந்த சோலையப்பன் என்பவரின் மகன் எஸ்.எஸ்.ரவி (62) பாரம்பரிய மிக்க குடும்பத்தில் பிறந்த எஸ்.எஸ்.ரவி அந்தக்காலத்திலயே பி.காம்., வரை படித்து கலைஞர் கருணாநிதி மற்றும் திராவிடக் கொள்கையின் மேல் உள்ள ஈர்ப்பின் காரணமாக 1981ம் ஆண்டு முன்னாள் எம்.எல்.ஏ. டி.கே. பழனிச்சாமி முன்னிலையில் தன்னை திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை ஆயுள் கால உறுப்பினராக இணைத்துக் கொண்டார்.

இவரது தந்தை சோலையப்பன் கருணாநிதியின் தீவிர விசுவாசியாக இருந்து வந்துள்ளார், எஸ்.எஸ். ரவி அமைச்சர் கீதாஜீவனின் தந்தையான பெரியசாமியின் தீவிர ஆதரவாளராக இருந்து வந்துள்ளார்.

கடந்த 45 ஆண்டுகளாக திராவிட முன்னேற்றக் கழகத்தில் பணியாற்றி வரும் எஸ்.எஸ்.ரவி கடந்த 2022- ம் ஆண்டு முதல் புதூர் மேற்கு ஒன்றிய துணைச்செயலாளராக பணியாற்றி வந்துள்ளார்.

2022-ம் ஆண்டு நடைபெற்ற மாவட்ட கவுன்சிலர் பதவிக்கு திமுக சார்பில் தேர்வு செய்யப்பட்ட எஸ்.எஸ்.ரவி பின்பு திமுக கூட்டணி கட்சியான மதிமுகவிற்கு ஒதுக்கப்பட்டதால் மாவட்ட கவுன்சிலர் விருப்பமனுவை வாபஸ் பெற்றார்.

கடந்த 2019 ம் நடைபெற்ற சட்டமன்ற இடைத்தேர்தலில் விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதியில் திமுக சார்பில் போட்டியிட விருப்பமனு அளித்தார், அதனைத் தொடர்ந்து 2021ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் விருப்பமனு அளித்தார், இந்நிலையில் தற்போது 2026ம் ஆண்டுநடைபெற உள்ள சட்டமன்றத்தேர்தலுக்கு திமுக சார்பில் தமிழகத்தில் உள்ள தொகுதிகளுக்கு திமுகவினர் விருப்பமனு அளித்து வருகின்றனர், திமுக விருப்பமனு அளிப்பது முடிவடைகிறது.

இந்நிலையில் மூன்றாவது முறையாக எஸ்.எஸ்.ரவி விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளருக்கு விருப்பமனு அளித்துள்ளார், ஏற்கனவே விளாத்திகுளம் தொகுதியின் தற்போதைய சட்டமன்ற உறுப்பினர் மார்க்கண்டேயன் மற்றும் ஏ.சி.வசந்தம் ஜெயக்குமார் விருப்பமனு அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

அதேபோல் திமுக கூட்டணியான காங்கிரஸ் தொகுதிக்கு விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி ஒதுக்கப்பட்டால் காங்கிரஸ் கட்சியின் மாவட்ட செயலாளரான பெருமாள்சாமி விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிட உள்ளதாகவும் அரசியல் வட்டாரங்களில் கூறி வருகின்றனர்.

2026 சட்டமன்றத்தேர்தலில் விளாத்திகுளம் தொகுதியில் திமுக சார்பில் போட்டியிடுவது எஸ்.எஸ்.ரவியா? இல்ல சட்டமன்ற உறுப்பினர் மார்கண்டேயனா ? அல்லது ஏ.சி.வசந்தம் ஜெயக்குமாரா ? அல்லது காங்கிரஸ் கட்சியின் மாவட்ட செயலாளர் பெருமாள் சாமியா என பொறுத்திருந்து பார்ப்போம். சில மாதங்களுக்கு முன்பு எஸ்.எஸ். ரவிக்கும் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் மார்கண்டயேனுக்கும் பனிப்போர் நடைபெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

# கன்னியாகுமரியில் திறந்து கிடந்த பீர் பாட்டிலில் இருந்த மதுவை குடித்தவர் உயிரிழப்பு - போலீஸ் விசாரணை !

கன்னியாகுமரி, மார்ச்.7-

கன்னியாகுமரியில் திறந்து கிடந்த பீர் பாட்டிலில் இருந்த மதுவை குடித்தவர் உயிரிழந்தார். இது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

நாகர்கோவில் மேலராமன் புதூர் பகுதியை சேர்ந்தவர் மாரியப்பன் மனைவி ஞான தங்கராணி. மாரியப்பன் மனைவியை பிரிந்து சென்றதால் தற்போது ஞான தங்கராணி ராஜா என்ற மகனுடன் தனது தங்கை வீட்டில் கன்னியாகுமரியில் வசித்து வருகிறார். இதற்கிடையே ராஜா மதுப்பழக்கத்திற்கு அடிமையாகி உள்ளார். இவர் மதுபாட்டில்களை பொறுக்கி விற்று வந்துள்ளார்.

சம்பவத்தினம் ராஜா கன்னியாகுமாரி ஜீரோ பாயிண்ட் பகுதியில் மது பாட்டில்கள் பொறுக்க சென்றார். அப்போது அங்கு மூடி திறந்த நிலையில் பீர் பாட்டிலில் மது இருந்துள்ளது.

அதை எடுத்து ராஜா குடித்துள்ளார். பின்னர் அது மது இல்லை என்பது தெரிய வந்தது. சிறிது நேரத்தில் மயங்கி விழுந்த ராஜாவை அக்கம் பக்கத்தினர் மீட்டு குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு சிகிச்சை பலனின்றி ராஜா பரிதாபமாக உயிரிழந்தார். இது குறித்து கன்னியாகுமரி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.



மதுரை மாவட்டம், மாநகராட்சி, பெரியார் பேருந்து நிலையத்தில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் தமிழக அரசின் திட்டங்கள் மற்றும் சாதனை தொடர்பான சிறு புகைப்பட கண்காட்சி நடைபெற்றது இக்கண்காட்சியை ஏராளமான பொதுமக்கள் கண்டு களித்து மகிழ்ந்தனர்.

விறு விறுப்பான
செய்திகளுக்கு தினமும்
'தின தமிழ்' படியுங்கள் !

# தமிழ்,தமிழ் என கூறி மத்திய அரசு செய்யும் ஏமாற்று வேலையை அனைவரும் ஒன்றிணைந்து முறியடிக்க வேண்டும்

## தஞ்சாவூரில் துணை முதல்- அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு



தஞ்சாவூர், மார்ச். 7-

தஞ்சாவூர் கரந்தை தமிழ் சங்கத்தில் நிரந்தர உறுப்பினர் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி உருவ சிலை மற்றும் தமிழ் சங்கத்தின் முன்னாள் தலைவர் செயலாளர் ராமநாதன் உருவ சிலை திறப்பு விழா நடைபெற்றது.

. விழாவிற்கு மத்திய மாவட்ட தி.மு.க செயலாளர் துரை .சந்திர சேகரன் எம்எல்ஏ தலைமை தாங்கினார். கரந்தை கலைக் கல்லூரி முதல்வர் ராசாமணி அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு கருணாநிதி, ராமநாதன் ஆகியோரின் உருவ சிலைகளை திறந்து வைத்தார்.

பின்னர் அவர் பேசியதாவது:-

வரலாற்றுச் சிறப்புமிக்க கரந்தை தமிழ் சங்கத்தினுடைய வளாகத் திலே கருணாநிதி சிலையையும், சங்கத்துடைய முன்னாள் தலைவர் செம்மொழி வேளிர் ராமநாதனு டைய சிலையையும் உங்களு டைய முன்னிலையிலே திறந்து வைத்த .தில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

.நிகழ்ச்சியினுடைய தொடக்கத் திலே தமிழ்த் தாய் வாழ்த்தை நாம் பாடி இருக்கின்றோம். தமிழ்த் தாய் வாழ்த்து முதன்முதலாகப் பாடப் பட்டது .இந்தக் கரந்தை தமிழ்ச் சங்கத்தில்தான். அதன் பிறகு 1970-களில் கருணாநிதி தமிழ்த்தாய் வாழ்த்தைத் தமிழ்நாடு அரசினு டைய தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலாக அறிவித்தார்.

.இது வெறும் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் தான். இதற்கு எழுந்து நின்று நம்முடைய மரியாதை செலுத்தத் தேவையி ல்லை என்று ஒரு கூட்டம் சொல் கிறது. இன்னும் சில பேர் சட்டப் பேரவையிலே இந்த பாட்டையே பாடக்கூடாது ,அப்படின்னு ஒரு கூட்டம் சொல்கிறது. ஆனா இந்த பாடல் தமிழ்நாடு அரசினுடைய மாநிலப் பாடல் என்பதை அறிவித் து அதைப் பாடும் பொழுது அனைவரும் எழுந்து நின்று மரியாதை செலுத்த வேண்டும் என்று அரசாணையைப் போட்டவர் கருணாநிதி தான். கரந்தை தமிழ்ச் சங்கத்தின் மீது கருணாநிக்கு எப்பொழுதுமே மிகப்பெரிய பற்றும் ஈடுபாடும் உண்டு. குறிப் பாகச் சொல்ல வேண்டும் என்றால் , 1962-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் கருணாநிதி தஞ்சையில் போட்டியிட்டபோது கரந்தை பகுதி யிலிருந்து தான் தன்னுடைய தேர்தல் பணிகளை அவர் செய்தார். கருணாநிதி சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற கரந்தை தமிழ்ச் சங்கத்தின் நிர்வாகிகள் அத்தனை பேரும் பிரசாரத்தில் ஈடுபட்டார்கள்.

அப்படிப்பட்ட கரந்தை தமிழ்ச் சங்க த்தில் கருணாநிதி, ராமனாதன் ஆகியோரின் சிலையையும் திறந்து வைக்கின்ற வாய்ப்பைக் கொடுத்த தமிழ்ச் சங்கத்திற்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். 1911-ம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தச் சங்கம் இன்றைக்கு100 ஆண்டுக ளைக் கடந்து தமிழ்ச் சேவை, கல்விச் சேவைன்னு சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது.

தமிழுக்கு வருகிற ஆபத்துகளை எதிர்க்கிறது ஒரு பக்கம். தமிழினு டைய பெருமையைப் பரப்புரது இன்னொரு பக்கம்னு இந்தச் சங்கத்துடைய பணிகள் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது .தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டும் என 1920-லேயே தீர்மானம் போட்டது கரந்தை தமிழ்ச் சங்கம்தான். இந்தச் சங்கத்துடைய தலைவராகப் பணியாற்றிய செம்மொழி வேளிர் ராமநாதனின் பங்கு மிகுந்த சிறப்பு வாய்ந்தது.முக்கியம் வாய்ந்தது.

தமிழுக்குத் தனிப் பல்கலைக் கழகம் தேவை என்று கரந்தை தமிழ்ச் சங்கம்தான் முதன் முதலாகத் தீர்மானம் போட்ட சங்கம்.

எல்லாத்தையும் விட ஒரு கூடுதல் மிகப்பெரிய ஒரு சிறப்பு 1937-ல் கல்வி நிறுவனங்களில் இந்தி மொழியைத் திணிக்கும் போது அதை எதிர்த்துத் தீர்மானம் போட்டதும் இந்தக் கரந்தை தமிழ்ச் சங்கம்தான். இந்தித் திணிப்பை எதிர்த்து நடந்த போராட்டத்துல நூற்றுக்கணக்கான மகளிரைப் பங்கேற்க வைத்த அன்னை தர்மாம்பாள் இந்தக் கரந்தையை, சேர்ந்தவங்கதான்.அப்போது தொடங்குன இந்தித் திணிப்பு முயற்சி இப்ப வரைக்கும் தொடர்ந்துகிட்டு இருக்கிறது. நேற்று கூட நீங்க தொலைக் காட்சியில பார்த்திருப்பீங்க. திருச்சியில இருக்கக்கூடிய தெற்கு ரெயில்வே அலுவலக வாயிலில் இந்தி மொழி யில் எழுதி வைத்ததை எதிர்த்து நம்முடைய முதலமைச்சர் தான் முதல் எதிர்ப்புக் குரல் பதிவு செய்தார்கள். அதுமட்டுமின்றி, இன்றைக்கு புதிய கல்விக் கொள்கை என்ற பெயரில் எப்படியாவது மீண்டும் தமிழ்நாட்டிற்குள்ளே இந்தியை திணிக்க முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். . தமிழ்நாட்டினுடைய கல்வி நிதி ரூ. 3,500 கோடியை கொடுக்காமல் மத்திய அரசு வஞ்சித்து வருகிறது. புதிய கல்விக் கொள்கை, மும்மொழி கொள்கையை ஏற்றுக்கொண்டால் தான் அந்த 3,500 கோடியை கொடுப்போம் என்று மத்திய அரசு கூறுகிறது.

ஆனா நம்முடைய முதலமைச்சர் 3,500 கோடி இல்லை.10,000 கோடி கொடுத்தாலும் இந்தியையும் சமஸ்கிருதத்திற்கும் தமிழ்நாட்டில் எந்த நேரத்திற்கும் இடம் கிடையாது என்று உறுதியாக கூறிவிட்டார்.

கருணாநிதி வழியில் நம்முடைய முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு தமிழ் வளர்ச்சிக்காக ஏராளமான திட்டங்களைச் செய்து வருகிறது.

தமிழினுடைய தொன்மையை வெளி உலகிற்குச் சொல்கிற வகையிலே வேர்ச் சொல் ஒப்பீட்டு ஆய்வுகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது . தமிழறிஞர்களுக்கு விருதுகளும், தேசிய சர்வதேச விருதுகளைப் பெற்ற எழுத்தாளர் களுக்கு வீடுகளும் நம்முடைய முதலமைச்சர் தொடர்ந்து வழங்கி வருகிறார். தமிழினுடைய அரிய நூல்கள் எல்லாமே இன்றைக்கு டிஜிட்டல் வடிவில் மாற்றப்படுகிறது. தமிழில் இருக்கக்கூடிய சிறந்த நூல்கள் உலகத்தில் இருக்கக் கூடிய பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வருகிறது. அதேபோல் உலகின் சிறந்த நூல் களை எல்லாம் தமிழில் கொண்டு வர முயற்சிகளை நம்முடைய அரசு எடுத்து வருகின்றது.

. ஆனால் மத்திய அரசு சமஸ்கிருதத்தை வளர்க்கிறதில் மட்டும்தான் அக்கறையைக் காட்டி வருகின்றது. கடந்த 10 ஆண்டுக ளில் சமஸ்கிருத வளர்ச்சிக்காக மட்டும் மத்திய அரசு ஒதுக்கிய தொகை ரூ.2,500 கோடி. ஆனால் நம்முடைய தமிழ் மொழி வளர்ச்சிக் காக மத்திய அரசு ஒதுக்கிய தொகை வெறும் 147 கோடி ரூபாய்.

தமிழ் தமிழ்ன்னு சொல்லி இன்றைக்கு மக்களை ஏமாற்றும் வேலையை மத்திய அரசு செய்து வருகி ன்றது. அந்த ஏமாற்று வேலைகளை எல்லாம் நாம் அனைவரும் ஒன்றிணைந்து முறியடிக்க வேண்டும். உண்மையாகத் தமிழுக்காக உழைப்பவர்கள் யார்? போலித்தனமாக நடிப்பவர்கள் யார்? என்பதை மக்களுக்கு நாம் வெளிச்சம் போட்டுக் காட்ட வேண்டும்.

.எனவே இந்த முக்கியமான நேரத்தில் நீங்கள் அத்தனை பேரும் நம்முடைய முதலமைச்சருக்கு உறுதுணையாக இருக்க வேண்டும். அன்னைத் தமிழைப் காப்போம், ஆதிக்க மொழித் திணிப்பை என்றும் வீழ்த்துவோம்.

இவ்வாறு அவர் பேசினார்.

. நிகழ்ச்சியில் முன்னாள் மத்திய அமைச்சர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், முரசொலி எம்.பி, முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கம், டி.கே ஜி. நீலமேகம் எம்எல்ஏ, தாட்கோ தலைவர் இளையராஜா, மேயர் சண்.ராமநாதன், துணை மேயர் அஞ்சுகம் பூபதி, கவுன்சிலர் செந்தமிழ் செல்வன், தமிழ் சங்கத் தலைவர் பார்த்தசாரதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். நிறைவில் தமிழ் சங்க செயலாளர் சுந்தரவதனம் நன்றி கூறினார்.




**கோவை மாவட்டம் பெரிய தடாகம் பகுதியில் காபி 2.0 கடை திறப்பு விழா கிளைக் கழக செயலாளர் சிவக்குமார் முன்னிலையில் கோவை வடக்கு மாவட்ட செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். உடன் கூடலூர் நகராட்சி தலைவர் அறிவரசு பெரிய தடாகம் திமுக மற்றும் பெரிய நாயக்கம்பாளையம் மேற்கு ஒன்றியம் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.**

# மேலநீலிதநல்லூர் மேற்கு ஒன்றிய திமுக செயல்வீரர்கள் கூட்டம் : மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ பங்கேற்பு !




சங்கரன்கோவில். மார்ச்.7-

தென்காசி வடக்கு மாவட்டம் மேலநீலிதநல்லூர் மேற்கு ஒன்றிய திமுக செயல்வீரர்கள் கூட்டம் நடந்தது. மேலநீலித நல்லூர் மேற்கு ஒன்றிய பொறுப்பாளர் ராஜதுரை தலைமை வகித்தார்.

கூட்டத்தில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ கலந்து கொண்டு பேசினார்.

கூட்டத்தில் மேலநீலிதநல்லூர் ஒன்றிய செயலாளர் பெரியதுரை, மேற்கு ஒன்றிய அவைத்தலைவர் மாரியப்பன், ஒன்றிய துணைச் செயலாளர்கள் செல்லத்துரை, சித்ரா, கொடிகோபாலகிருஷ்ணன், மாவட்ட பிரதிநிதிகள் ஆறுமுக சாமி, ஆர்விஎஸ் முத்துச்சாமி,கிருஷ்ண பெருமாள் ,மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை பிரேம்குமார்,மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் சரவணன் மற்றும் அனைத்து ஊர் கிளை கழக செயலாளர் பிரதிநிதிகள், பாக முகவர்கள், மற்றும் முன்னாள் செயலாளர்கள் கழக உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# காவேரிப்பட்டினத்தில் கிரிக்கெட் போட்டி

கிருஷ்ணகிரி, மார்ச்.07-

காவேரிப்பட்டினத்தில் நடைப்பெற்ற முதலாம் ஆண்டு கிரிக்கெட் போட்டியை காங்கிரஸ் கட்சியின் மாநில பொதுக்குழு உறுப்பினர் எல். சுப்பிரமணியன் துவக்கி வைத்தார்.

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் அருகில் உள்ள தாசம்பட்டியில் டான் குருப்ஸ் சார்பில் முதலாம் ஆண்டு மாபெரும் கிரிக்கெட் போட்டி நடைப்பெற்றது.

மூன்று நாள்கள் நடைப்பெற உள்ள இந்த



கிரிக்கெட் போட்டியில் கிருஷ்ணகிரி, ஒசூர், காவேரிப்பட்டினம் உள்ளிட்ட மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் இருந்து சுமார் 24 அணிகள் கலந்துக் கொண்டுள்ளன. இந்த கிரிக்கெட் போட்டியில் சிறப்பு அழைப்பாளராக கலந்துக் கொண்ட கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட முன்னாள் காங்கிரஸ் தலைவரும், காங்கிரஸ் கட்சியின் மாநில பொதுக்குழு உறுப்பினரும்,மிட்டஹள்ளி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவருமான எல். சுப்பிரமணியன் மற்றும் காவேரிப்பட்டினம் பேருராட்சி தலைவர் அம்சவேணி செந்தில் குமார் ஆகியோர் துவக்கி வைத்தனர்.

இதனைதொடர்ந்து கிரிக்கெட் போட்டிகள் நாக்கவுண்ட் முறையில் நடைப்பெற்று வருகிறது. மூன்று நாள்கள் நடைப்பெறும் இந்த கிரிக்கெட் போட்டியில் இறுதிப் போட்டியில் வெற்றி பெறும் அணிகளுக்கு கேடயம் மற்றும் ஊக்கப் பரிசுகளும் வழங்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

**தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள் !**




# திருவெண்ணெய்நல்லூர் அருகே அரசூரில் ஜெயலலிதா 78-வது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம்

அரசூர்.மார்ச்.07-

உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட அரசூரில் தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா 78-வது பிறந்தநாளை முன்னிட்டு பொதுக்கூட்டம் மாவட்ட செயலாளர் இரா.குமரகுரு தலைமையில் நடைபெற்றது. இதில் இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறை மாநில செயலாளர் வி.பி.பி.பரமசிவம், தலைமை கழக பேச்சாளர் காயத்ரி ரகுராம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இதில் ஒன்றிய செயலாளர்கள் இராம.ஏகாம்பரம், இராமலிங்கம், செண்பகவேல், முன்னாள் எம்.எல்.ஏ., பிரபு, மாவட்ட மாணவரணி செயலாளர் பாக்யராஜ், ஊராட்சி மன்ற தலைவர்கள் அரசூர் ரவிச்சந்திரன், எரளூர் வெங்கடாஜலபதி, உள்ளிட்ட அதிமுக நிர்வாகிகள், கழக வழக்கறிஞர்கள், மகளிர் அணியினர் மற்றும் மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# நாகர்கோவிலில் ஆட்டோ டிரைவரை இரும்பு கம்பியால் தாக்கிய அண்ணன் தம்பி மீது வழக்கு

நாகர்கோவில், மார்ச். 7 -

நாகர்கோவில் கீழராமன் புதூர் பகுதியை சேர்ந்தவர் அஜித் (32) ஆட்டோ டிரைவர். இவரது மனைவி தேவி (28). இவர் தட்டான்விளை பகுதியை சேர்ந்த விஜயகுமாரி என்பவருக்கு ரூ 1லட்சம் கடன் வாங்கி கொடுத்துள்ளார். ஆனால் அந்த பணத்தை விஜயகுமாரி முறையாக திருப்பிக் கொடுக்கவில்லை. இதனால் அவர்களுக்குள் முன் விரோதம் இருந்தது.

இந்த விவரம் குறித்து விஜயகுமாரி தனது மகன்கள் ஆன சுபாஷ் (26), அஜய் கண்ணன் (24) ஆகியோரிடம் தெரிவித்துள்ளார். இதனால் அவர்கள் தேவியிடம் தகராறு செய்து அவதூறு பேசி உள்ளனர். இது குறித்து தேவி தனது கணவர் அஜித்திடம் கூறியுள்ளார். இதை கண்டிக்கும் வகையில் சுபாஷ், அஜய் ஆகியோரை சந்தித்து அஜித் கேட்டுள்ளார்.

இதனால் ஏற்பட்ட முன்விரோதத்தில் நேற்று முன்தினம் மாலையில் தட்டான்விளை என்ற பகுதியில் அஜித் வரும் போது, சுபாஷ் மற்றும் அஜய் கண்ணன் ஆகியோர் சேர்ந்து தகராறு செய்து இரும்பு கம்பியால் அஜித்தை தாக்கியுள்ளனர். இதில் அவர் படுகாயம் அடைந்து மயங்கி கீழே விழுந்தார். அவரை மீட்டு குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சேர்த்துள்ளனர்.

புகாரின் பேரில் நேசமணி நகர் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். இதில் அஜய் கண்ணன் மீது கோட்டார், நேசமணி நகர் காவல் நிலையங்களில் வழக்குகள் உள்ளது. குற்ற பதிவேடு பட்டியலில் 'சி' பிரிவில் அவர் உள்ளார். அதுபோல் படுகாயம் அடைந்த அஜித் மீதும் வழக்குகள் உள்ளன அவரும் சரித்திர பதிவேடு பட்டியலில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இரணியல் ரயில் தண்டவாளத்தில் அமர்ந்து இளைஞர் காங்கிரஸ் திடீர் போராட்டம்

**நாகர்கோவில், மார்ச். 7 –**

**கன்னியாகுமரி மாவட்டத்தில் ரயில் நிலையங்களை ஆய்வு செய்ய ரயில்வே அதிகாரிகள் நேற்று வந்தனர்.**

**அதிகாரிகள் இரணியல் ரயில் நிலையம் வந்த போது, குமரி கிழக்கு மாவட்ட இளைஞர் காங்கிரஸ் மாவட்ட தலைவர் பியூட்லின் ஜீவா தலைமையில், இரணியல் ரயில்வே நிலையத்தில் 5 வது நடைமேடை அமைத்து அத்தியாவசிய பணிகளை உடனடியாக செய்ய வேண்டும் என்ற கோரிக்கை மனுவை ரயில்வே நிலையத்தில் ஆய்வு செய்ய வந்த ரயில்வே அதிகாரிகளிடம் வழங்கினர்.**

**ஆனால் அதிகாரிகள் அந்த மனுவை வாங்க மறுத்து மனு அளிக்க வந்த யாரையும் சந்திக்காமல் ஒரு மணி நேரமாக அலைக்கழித்தனர்.**

**இந்த காரணத்தால் அதிகாரிகள் வந்த சோதனை ரயிலை இளைஞர் காங்கிரஸ் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் இணைந்து சிறைபிடித்தனர்.**

**பின்னர் ரயில்வே அதிகாரி நடத்திய பேச்சுவார்த்தையில் 30 நாட்களுக்குள் பணிகளை**




**முடித்து தருவதாக உறுதி கூறியதன் மூலம் போராட்டம் கைவிடப்பட்டது. இந்த நிகழ்வில் குருந்தன்கோடு வட்டார இளைஞர் காங்கிரஸ் தலைவர் ஸ்ரீவேணு முன்னிலை வகித்தார் .**

**உடன் மாவட்ட இளைஞர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் மதியழகன் , திங்கள்நகர் பேரூராட்சி தலைவர் சுமன் ரீத்தாபுரம் பேரூராட்ச்சி துணை தலைவர் விஜீமோன் , திங்கள்நகர் பேரூராட்சி வார்டு உறுப்பினர் ஜேக்கப் , தக்கலை வட்டார தலைவர் திஜீ , வின்செண்ட், மற்றும் பலர் கலந்து கொண்டனர்**

# காரமடையில் நகர திமுக சார்பில் தமிழக முதல்வரின் பிறந்த நாளை முன்னிட்டு முதியோர் இல்லத்தில் உணவு வழங்கும் நிகழ்ச்சி



**கோவை, மார்ச்.07–**

**கோவை மாவட்டம் காரமடை நகராட்சியில் நகர திமுக சார்பில் திமுக தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு க ஸ்டாலின் அவர்களின் 73வது பிறந்த நாளை முன்னிட்டு குட்டையூர் அருகே உள்ள ஆனந்தம் முதியோர் இல்லத்தில் உன்ன 40 முதியவர்களுக்கு மதிய உணவு வழங்கும் நிகழ்ச்சி திமுக நகர் கழக பொறுப்பாளர் கே.ஜி.குருபிரசாத் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் தமிழக முதல்வருக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்து, பின் இனிப்பு, காரம் மற்றும் அசைவ உணவு விருந்தாக அனைவருக்கும் பரிமாறப்பட்டது. இதில் சிறப்பு அழைப்பாளர்களாக மேட்டுப்பாளையம் நகர செயலாளர்கள் பா.முனுசாமி, அசரப் அலி, காரமடை தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் பிரதீப், ஆகியோர் கலந்து கொண்டார்கள். நிகழ்வில்ஸீவடக்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் பாலாஜி, மாணவரணி துணை அமைப்பாளர் ராஜ்திலக் மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள், நகரக் கழக கட்சி நிர்வாகிகள் என பலர் கலந்து கொண்டனர்.**

# நாகர்கோவில் ராஜாஸ் இன்டர்நேஷனல் பள்ளி குழந்தைகளுக்கு நடத்தப்பட்ட பட்டமளிப்பு விழா




நாகர்கோவில், மார்ச். 7-

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் ராஜாஸ் இன்டர்நேஷனல் தனியார் பள்ளியில் மழலையர் பிரிவு குழந்தைகளுக்கான பட்டமளிப்பு விழா சிறப்பாக நடைபெற்றது. சின்னஞ்சிறு குழந்தைகளின் கல்விப் பயணத்தின் தொடக்கம் மிக சிறப்பாக அமைய வேண்டும் என்ற நோக்கில் சிறந்த கல்வி தரத்துடன் சின்னஞ்சிறு குழந்தைகள் எளிதில் புரிந்து கொள்ளும் விதமாக சமுதாய சிந்தனை, பெரியோர் முதல் சிறியோர் வரை அனைவரையும் மதித்தல் போன்ற சமுக கல்வியையும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் கற்று தேர்ச்சி பெற்று முதல் வகுப்பிற்கு முன்னேறி செல்லும் நிகழ்வு கலை நிகழ்ச்சிகளுடன் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் பெற்றோர் முன்னிலையில் மாணவ மழலை செல்வங்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

பள்ளி வளாகத்தில் நடைபெற்ற இவ்விழாவில் யூகேஜி முடிக்கும் குழந்தைகளுக்கு, கல்லூரி பட்டமளிப்பு விழாவைப் போன்ற தொப்பி மற்றும் 2026 எண்கள் பொறிக்கப்பட்ட பேல்ஜ் சால்வை அணிந்து பட்டங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

இந்த பட்டங்கள் மற்றும் சான்றிதழ்களை பள்ளியின் தாளாளர் மலர் விழி மற்றும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட டாக்டர். முகமது யாசர், டாக்டர்.ரேஷ்மி ஆகியோர் மழைகளுக்கு பட்டங்களையும் சான்றிதழ்களையும் வழங்கினார்கள்.

மேலும் குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள், நடனம் மற்றும் தங்கள் கனவுகளை பொற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் முன்னிலையில் கூறும் நிகழ்வும் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் பள்ளி நிர்வாகத்தினர் கலந்து கொண்டு குழந்தைகளை வாழ்த்தினர். குழந்தைகளின் பெற்றோர் தங்கள் குழந்தைகளுடன் பட்டம் பெற்ற பின்பு புகைப்படம் எடுத்து ஆனந்தம் அடைந்தனர்



தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் சென்னையிலிருந்து காணொளி காட்சி வாயிலாக கனவுகள் மெய்ப்படும் "என் ஊர் என் கனவு" திட்டத்தின் கீழ் இலக்கு 2030 உத்திகள் மற்றும் செயல் திட்ட ஆவணத்தினை வெளியிட்டார். இதை தொடர்ந்து வீட்டுவசதி மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி ஈரோடு பரிமளம் மஹாலில் ஈரோடு மாவட்டத்தில் கடந்த ஐந்தாண்டுகளில் நடைபெற்ற சாதனைகள் மற்றும் திட்டங்கள் குறித்த ஆவணம் மற்றும் "என் ஊர் என் கனவு" திட்டத்தின் கீழ் இலக்கு 2030 உத்திகள் மற்றும் செயல் திட்ட ஆவணத்தினை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியின்போது மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாச்சலம், ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் செல்வராஜ், திட்ட இயக்குநர் பிரியா, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் கந்தராஜா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# திருவெண்ணெய்நல்லூர் ஜெ.ஜி.நர்சரி பள்ளியில் விளையாட்டுப் போட்டிகள் கலை நிகழ்ச்சிகளுடன் நடைபெற்றது



திருவெண்ணெய்நல்லூர்.மார்ச்.07-

விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் ஜெ.ஜி நர்சரி பள்ளியில் விளையாட்டுப் போட்டிகள் கலை நிகழ்ச்சிகளுடன் கோலாகலமாக நடைபெற்றது. இப்பள்ளியில் ஒவ்வொரு ஆண்டும் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுவது வழக்கம்.

இந்நிலையில் இந்த ஆண்டிற்கான விளையாட்டுப் போட்டிகள் நேற்று கோலாகலமாக நடைபெற்றது. விழாவிற்கு பள்ளி தாளாளர் கார்த்திகேயன் தலைமை தாங்கினார். பள்ளி முதல்வர் ஹேமலதா குபேந்திரன் அனைவரையும் வரவேற்றார். விழாவில் முன்னாள் தீயணைப்பு துறை அலுவலர் கோபால் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பள்ளி குழந்தைகளுக்கு பரிசுகள் மற்றும் பாராட்டு சான்றிதழ் வழங்கி சிறப்பித்தார். அதனைத் தொடர்ந்து பள்ளி குழந்தைகளின் ஆடல், பாடல் கலை நிகழ்ச்சிகள் கோலாகலமாக நடைபெற்றது. இதில் பள்ளி ஆசிரியர்கள், அலுவலக ஊழியர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர். இறுதியாக பள்ளி ஆசிரியர் மீனா நன்றி கூறினார்.

# கிணத்துக்கடவு வட்டம், ஜக்கார்பாளையம் கிராமத்தில் பொதுமக்களுக்கு மருத்துவ முகாம்!

கோவை மார்ச். 07–


கிணத்துக்கடவு வட்டம், சிறுக்களந்தை பஞ்சாயத்திற்குட்பட்ட ஜக்கார்பாளையம் கிராமத்தில், சமூக நலத்தை முன்னிறுத்தும் வகையில் மருத்துவ முகாம் நடைபெற்றது.

யான் அறக்கட்டளை சார்பில், கே.எம்.சி.கச் மருத்துவமனை




யுடன் இணைந்து இந்த முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது. கிராமப்புற மக்களுக்கு தரமான மருத்துவ சேவைகளை அணுகக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தும் நோக்கத்துடன் இந்த முயற்சி முன்னெடுக்கப்பட்டது. இந்த மருத்துவ முகாமிற்கு தேவையான மருந்துகள் அனைத்தையும் வோக்ஹார்ட் அறக்கட்டளை வழங்கி, சமூகப் பொறுப்புணர்வுடன் ஆதரவு அளித்தது.

முகாமில் எலும்பியல், பல் மருத்துவம், கண் மருத்துவம், மகப்பேறு மற்றும் பெண்கள் நலம், காதுரூ மூக்குரூ தொண்டை, பொது மருத்துவம் உள்ளிட்ட 6க்கும் மேற்பட்ட சிறப்பு மருத்துவ துறைகளைச் சேர்ந்த நிபுணர்கள் கலந்து கொண்டு, பொதுமக்களுக்கு முழுமையான பரிசோதனைகளை மேற்கொண்டனர். இ.சி.ஜி பரிசோதனை உள்ளிட்ட முக்கிய மருத்துவ சோதனைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், தேவையானவர்களுக்கு உடனடி சிகிச்சையும் ஆலோசனையும் வழங்கப்பட்டது. தொடர்ந்து சிகிச்சை தேவைப்படுவோருக்கு பரிந்துரைகளும் அளிக்கப்பட்டது. இந்த முகாமின் மூலம் 100க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பயனடைந்தனர். குறிப்பாக, மூத்த குடிமக்கள் மற்றும் பெண்கள் அதிகளவில் கலந்து கொண்டு பயன்பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. முகாமை ஒருங்கிணைப்பாளர் மனோஜ்குமார் மற்றும் அவரது குழுவினர்கள், வோக்ஹார்ட் அறக்கட்டளை திட்ட இயக்குனர் பூர்ண சந்திரன், மருத்துவர் தீபக் குமார், மருந்தாளுநர் இக்பால், மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# தெற்கு சட்டமன்ற தொகுதியில் 3 கோடியே 50 லட்சம் மதிப்பீட்டில் பல்வேறு திட்ட பணிகள் துவக்க விழா!

திருப்பூர், மார்ச்.07-

திருப்பூர் மத்திய மாவட்டம் தெற்கு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கொங்கணகிரி பகுதி கழகத்தில் தெற்கு தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற சாலை ஊர் கட்டமைப்பு திட்டத்தில் ரூபாய் 3 கோடியே 50 லட்சம் மதிப்பீட்டில் பல்வேறு திட்ட பணி துவக்க விழாவினை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் திருப்பூர் திமுக மத்திய மாவட்ட கழக செயலாளர் க செல்வராஜ் எம்எல்ஏ துவக்கி வைத்தார் உடன் மாநகரச் செயலாளர் டி கே டி மூநாகராஜ். பகுதி செயலாளர் ஈஸ்வரமூர்த்தி. மாநகராட்சி அதிகாரிகள் ஆறுமுகம்.சுப்பையா. கவுன்சிலர் திவாகரன். தலைமை செயற்குழு உறுப்பினர் சலீம் பாய்.

மற்றும் திமுக வட்டக் கழக செயலாளர்கள். தீப்பெட்டி ரவிச்சந்திரன்.க வெங்கடேஷ். திருநாவுக்கரசு.பர்னிச்சர் செந்தில்.சுகுமார். ஜெய்சங்கர்.சபி ராஜேந்திரன். திருநாவுக்கரசு.மற்றும் தலைமைக் கழக பேச்சாளர் ரஜினி செந்தில். கழக நிர்வாகிகள் ஊர் பொதுமக்கள் பெரும் திரளாக பங்கேற்றனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் சென்னை நந்தம்பாக்கம், வர்த்தக மையத்திலிருந்து காணொளிக்காட்சி வாயிலாக, தமிழ்நாடு 2030 கனவுகள் மெய்ப்படும் மாபெரும் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. அதனைத்தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் கிருஷ்ணகிரி நாடாளுமன்ற உறுப்பினர் .கே.கோபிநாத், சட்டமன்ற உறுப்பினர்கள் .ஒய்.பிரகாஷ் ஓசூர், திரு.தே.மதியழகன் பர்கூர், ஓசூர் மாநகராட்சி மேயர் .எஸ்.ஏ.சத்யா ஆகியோர் "என் ஊரு என் கனவு க்ஷிவீஷீவீ ஷீஸீ 2030 கிருஷ்ணகிரி தமிழ் " பிரதிகளை வெளியிட்டனர். உடன் மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் பொது .கிருஷ்ணன், இணை இயக்குநர் தோட்டக்கலை .இந்திரா, மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் வேளாண்மை .பா.ஏஞ்சலின் பொன்ராணி, துணை ஆட்சியர் பயிற்சி செல்வி.சௌமியா ஆகியோர் உள்ளனர்.

# தென்காசியில் ரூ.106 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்டங்களை துணை முதல்வர் உதய நிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்




தென்காசி, மார்ச்.07-

தென்காசி மாவட்டம் தென்காசி ஈஸ்வரன் பிள்ளை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 7,127 பயனாளிகளுக்கு ரூ.44 கோடியே 5 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.

மேலும் ரூ.6 கோடியே 2 லட்சம் மதிப்பிலான 32 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்ததுடன் ரூ.55 கோடியே 93 லட்சம் மதிப்பிலான 185 புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

நிகழ்ச்சியில் பேசிய துணை முதல்வர் திராவிட மாடல் ஆட்சியில் பெண்கள் மற்றும் விவசாயிகளுக்கான பல்வேறு நலத்திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் ராணி ஸ்ரீகுமார், சட்டமன்ற உறுப்பினர்கள் பழனி நாடார், ராஜா ,சதன் திருமலை குமார் ,மாவட்ட ஆட்சித் தலைவர் கமல் கிஷோர், மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன், தென்காசி தெற்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் ஜெயபாலன் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கன்னியாகுமரி அருகே பைக்குகள் மோதல் ஒருவர் படுகாயம்!

கன்னியாகுமரி, மார்ச். 7 -

வள்ளியூர் பகுதியை சேர்ந்தவர் பிரகாஷ்ராஜ் (28). இவர் தனது நண்பரான செங்கோட்டையை சேர்ந்த காசி விசுவநாதன் (48) என்பவருடன் பைக்கில் கன்னியாகுமரிக்கு சுற்றுலா வந்தார். அங்கு பல்வேறு இடங்களை சுற்றி பார்த்துவிட்டு மறுபடியும் பைக்கில் திரும்பி சென்று கொண்டிருந்தனர். பைக்கை பிரகாஷ்ராஜ் ஓட்டினார். அப்போது நான்கு வழிச்சாலையில் கார்மல் மாதா ஆலய சந்திப்பு பகுதியில் சென்றபோது ஒரு வழி பாதையில் தவறாக வாலிபர் ஒருவர் ஓட்டி வந்த பைக் பிரகாஷ்ராஜ் ஓட்டிய பைக் மீது மோதியது.

இதில் காசி விஸ்வநாதன் கீழே விழுந்து படுகாயம் அடைந்தார். பிரகாஷ்ராஜ் மற்றொரு பைக்கில் அந்த கன்னியாகுமரி இரட்சகர் தெருவை சேர்ந்த ரெஜின் (26) ஆகியோர் காயங்கள் இன்றி தப்பினர். இதை அடுத்து காயம் அடைந்த காசி விஸ்வநாதன் கன்னியாகுமரி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேல் சிகிச்சைக்காக குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். இது குறித்த புகாரின் பேரில் கன்னியாகுமரி போலீசார் ரெஜின் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



# ஈரோடு நக்கீரர் வீதி எல்லை மாரியம்மன் கோவில் திருவிழா

ஈரோடு மார்ச் 7

ஈரோடு நக்கீரர் வீதியில் விநாயகர், பாலமுருகன், புது எல்லை மாரியம்மன் திருக்கோவில் உள்ளது. இந்த கோவிலின் திருவிழா கடந்த 24 ம் தேதி கணபதி ஹோமம் பூச்சாட்டுதல் நிகழ்ச்சியுடன் தொடங்கியது. 27 ம் தேதி 108 சங்காபிஷேகம் 5 ந் தேதி அம்மன் புஷ்ப பல்லக்கில் நகர் உலா வரும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதையடுத்து இன்று காலை காரைவாய்க்கால் சென்று தீர்த்தம் பால் குடம் மற்றும் கபாலம் எடுத்து வந்து அம்மனுக்கு அபிஷேக ஆராதனை நடைபெற்றது. தொடர்ந்து சுமார் 1000க்கும் மேற்பட்டவர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. நாளை அம்மனுக்கு காய் கனி அலங்காரம் 8 ந் தேதி கும்பம் வாய்க்காலில் விடுதல் நிகழ்ச்சிகள் நடக்கின்றன.9ந் தேதி மறு பூஜையுடன் விழா முடிகிறது விழாவுக்கான ஏற்பாடுகளை 42 வார்டு நக்கீரன் வீதி விழா குழுவினர் செய்திருந்தனர்.

# இரணியல் அருகே கூரை வீட்டில் தீ விபத்து - பொருட்கள் சேதம்!




இரணியல், மார்ச்.7--

இரணியல் அருகே மேல்கரை அடுத்த பள்ளம்பாலம் பகுதியை சேர்ந்தவர் செல்லம் (61). இவருக்கு மனைவி மற்றும் 2 மகன்கள் உள்ளனர். இவர்கள் அந்த பகுதியில் கூரை வீட்டில் வசித்து வருகின்றனர். இந்த நிலையில் நேற்று அந்த பகுதியில் சூறாவளி காற்று திடீரென வீசியது. அப்போது அங்கு தென்னை மரத்திலிருந்து விழுந்த ஓலை ஒன்று அருகில் இருந்த உயர் அழுத்த மின்கம்பி மீது விழுந்தது. இதனால் ஓலை தீப்பற்றி எரிந்து, கூரை வீட்டில் விழுந்து, வீடு தீப்பிடித்தது.

இதை அடுத்து செல்லம் மற்றும் உறவினர்கள் தீயணைக்க முடயன்றனர். மேலும் தக்கலை தீயணைப்பு நிலைத்துக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன் பேரில் தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று தண்ணீரை பீச்சி அடித்து வீட்டில் பிடித்த தீயை அணைத்தனர்.

இந்த தீ விபத்தில் வீட்டிலிருந்து ரூபாய் 5 லட்சம் மதிப்புள்ளான கட்டில், மேஜை, நாற்காலிகள் தீயில் கருகி சேதம் அடைந்ததாக கூறப்படுகிறது. இந்த விபத்துக்கு மின்வாரியம் முழு பொறுப்பு என புகார் எழுந்துள்ளது. மின்வாரிய ஊழியர்கள் மாதாந்திர பராமரிப்பு பணிகள் அப்பகுதியில் செய்யவில்லை எனவும் மக்கள் குற்றம் சாட்டினர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.